அலுவலர்கள் – சுகாதார

# நலப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி கையேடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!



சென்னை, ஜூன் 28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (27.06.2025) சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரக அலுவலகத்தில், 2025-26 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக்கோரிக்கை அறிவிப்பு 110ன்படி, நான்காவது சர்வதேச பொது சுகாதார மாநாடு 2025 செப்டம்பர் மாதம், சேலம் மாவட்டத்தில் நடத்துவதற்கான இலச்சைனை (Logo) மற்றும் வலைதளம், கருப்பொருள் பாடலினை வெளியிட்டு, மானியக்கோரிக்கை அறிவிப்பு 85ன்படி, நோய்களை கட்டுப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டத்தன் கீழ் (IHIP - IDSP) மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுகாதார நலப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி கையேடு வெளியிட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தின் மருத்துவ அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 044-24300300 என்ற சிறப்பு தொலைபேசி எண் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். பிறகு பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் News Letter 5-ம் ஆண்டு தொடக்க இதழை வெளியிட்டு விழா பேருரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கடந்த நிதி நிலை அறிக்கையில் 110 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு அறிவிப்புகளும் படிப்படியாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று 2 அறிவிப்புகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஏராளமான சிறப்பு திட்டங்கள் இத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம், இதயம் பாதுகாப்போம் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத்தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் போன்ற ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 10 நாட்களாக ஏராளமாக திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட 7618 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் திட்டம் ஏற்கெனவே தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 10000 பேர் டயாலிசிஸ் செய்து கொள்ளும் நிலை என்பது இருக்கின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புரதச்சத்துள்ள உணவு தருகின்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளது.

### மானிய கோரிக்கை அறிவிப்பு (அ.எண்.85)

நோய்களை கட்டுப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டத்தன் கீழ் (IHIP - IDSP) மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுகாதார நலப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டில் 46,925 டெங்கு, 678 சிக்கன் குனியா, 327 மலேரியா, 7,466 உண்ணிக் காய்ச்சல், 3,918 எலிக்காய்ச்சல் 84 ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு தளத்தில் பதிவாகியது, இத்தரவுகளின் மூலமாக நோய் விரைவாக கண்டறியப்பட்டு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இதனை செம்மையாக செயல்படுத்திட டெங்கு, சிக்கன் குனியா, மலேரியா, உண்ணிக் காய்ச்சல், எலிக்காய்ச்சல், ஜப்பானிய மூளைக் காய்ச்சல் மற்றும் இதர தொற்று நோய்களுக்கான நோய் கண்டறிதல், சிகிச்சை முறைகள், கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி விரிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

### மானிய கோரிக்கை அறிவிப்பு அ.எண்.110

நான்காவது சர்வதேச பொது சுகாதார மாநாடு 2025 செப்டம்பர் மாதம் சேலம் மாவட்டத்தில் நடத்துவதற்கான இலச்சைனை (Logo), வலைதளம் மற்றும் கருப்பொருள் பாடல் வெளியிடுதல், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பொது சுகாதாரத் துறையில் மாமல்லபுரம் (2022 டிசம்பர் 5 முதல் 9 வரை), மதுரை (2023 டிசம்பர் 7 முதல் 9 வரை) மற்றும் தஞ்சாவூர் (2024 அக்டோபர் 3 முதல் 5 வரை) ஆகிய 3 சர்வதேச மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் வழங்கப்பட்டு வரும் சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் விதமாகவும், சுகாதாரத் துறையில் பணியாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு அலுவலர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையிலும் சர்வதேச அளவிலான இந்த பொது சுகாதார மாநாடு செயல்படுகின்றது. இந்த மகத்தான பணியினை தொடர்ந்து நடத்தப்பெறுவதை உறுதி செய்யும் விதமாகவும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை ஆராய்ச்சிப்பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டும், சர்வதேச பொது சுகாதார மாநாடு இந்த வருடம் செப்டம்பர் மாதம் 25 முதல் 27 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநாட்டிற்கான இலச்சினை, வலைதளம் மற்றும் பாடல் ஆகியவை இன்று வெளியிடப்பட்டது. இது போன்ற அறிவார்ந்த சிறந்த முன்னெடுப்புகள் ஊக்குவிக்கப்படுவதால் தமிழகத்தை தொடர்ந்து சுகாதாரத்தில் முன்னனி மாநிலமாக திகழச் செய்வதில் இந்த பொது சுகாதார மாநாடு பெரும் பங்கு வகிக்கிறது.

### News Letter 5-ம் ஆண்டு விழா இதழ் வெளியீடு

தமிழ்நாட்டில் நடைபெறும் பொது சுகாதார நிகழ்வுகள், திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் குறித்த தகவல்களை ஒருங்கிணைத்து, மாதந்தோறும் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை (1 முதல் 16 ஆம் தேதிகளில்) DPH News Letter வெளியிடப்படுகிறது. முதல் News Letter 16.06.2021 அன்று சென்னை, பொது சுகாதார இயக்குநரகத்தில் வெளியிடப்பட்டது. இரண்டாம் ஆண்டின் முதல் பதிப்பு 16.06.2022 அன்று Hotel Rain tree, சென்னையில் வெளியிடப்பட்டது. இது வரை 99 செய்திமடல்கள் (5 தொகுதிகள்) வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய இதழ்கள் மூலம், தகவல் பரிமாற்றம் மற்றும் விழிப்புணர்வு, கல்வி மற்றும் திறன் மேம்பாடு, அரசு சுகாதார திட்டங்களின் செயல்திறன், பொது மக்களுக்கான நலத் திட்டங்கள் போன்றவை பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதிலும், மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை பேணுவதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தின் மருத்துவ அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக 044 - 24300300 என்ற சிறப்பு தொலைபேசி எண் இன்று வெளியிடப்பட்டது.

### ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி முகாம்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் வைரஸ் நோய் கியூலக்ஸ் விஷ்ணுவி வகை கொசுக்கள் கடிப்பதால் மனிதர்களுக்கு பரவுகிறது. பன்றி மற்றும் பறவைகள் வைரஸ்களை தங்கள் உடலில் பெருக்கமடைய செய்கிறது. அவை பாதிப்பு அடைவதில்லை. இந்த ஜப்பானிய மூளைக்காச்சல் தடுப்பூசி கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், மதுரை, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, கரூர், புதுக்கோட்டை மற்றும் திரு வள்ளூர் ஆகிய 14 மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது. இதன்மூலம் 58,22,906 பேர் பயனடைந்துள்ளனர்.

மேலும் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தென்காசி, வேலூர், நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது. இந்த தடுப்பூசி முகாம்கள் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடத்தப்படும். இதற்காக பயிற்சி பெற்ற சுகாதார செவிலியர்களை கொண்டு 1 முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைக்கு தடுப்பூசி செலுத்தப்படும். இதன் மூலம் 32,64,099 குழந்தைகள் பயன்பெறுவர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், கூடுதல் இயக்குநர் மரு.சம்பத், இணை இயக்குநர் மரு.சந்தோஷ்குமார் மற்றும் பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுதில்லியில் 41 வது காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நேற்று (27.06.2025) எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், மற்றும் காவிரி தொழில் நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கரூர், நாமக்கல் கிழக்கு – மேற்கு மாவட்ட

# வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்! என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர்கள் வி.செந்தில்பாலாஜி – கே.எஸ்.மூர்த்தி பங்கேற்பு!

கரூர், ஜூன் 28–

கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களை சார்ந்த கழக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்து வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர்.இளங்கோ சிறப்புரை யாற்றினார்.

கரூரில் கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக வழக்கறிஞர் அணி சார்பில் 2026 ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர். இளங்கோ கலந்து கொண்டு தேர்தலில் பணியாற்றுவது குறித்தும், சட்ட நுணுக்கங்களோடு எதிர்கொள்ளது குறித்தும் திமுக வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

திமுக சட்டத்துறை மேற்கு மண்டலம் 2 கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, டிஎல்சி, சிஎல்சி, யுஎல்சி, என்எல்சி, சிடி எல் சி வழக்கறிகளுக்கான 2026 சட்டமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. மூத்த வழக்கறிஞரும், மாநில சட்டத்துறை செயலாளருமான என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை தாங்கி பேசினார். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.தாச பிரகாஷ், நாமக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தபாபு, வரவேற்புரை யாற்றினர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், கழக மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் கே.எஸ். மூர்த்தி, மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணி ராஜ், துணைச் செயலாளர்கள் எம்எஸ்பி .வீரமணி, ஜிசந்திர போஸ், நாமக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஏஆர். தன சேகரன், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவ காமசுந்தரி, முன்னாள் எம்எல்ஏ பி.காமராஜ், முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பி. ரமணி, துணைத்தலைவர் இரா. மணிவாசகம், துணை அமைப்பாளர்கள் கே எஸ்எம்.சாகுல்ஹமீது, சி சோம சுந்தரம், எம்.லட்சுமணன்,

டி பிச்சைமுத்து, எம்.செல்வகுமார், நாமக்கல் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் என்கேபி.வடிவேல், எஸ்.கண்ணன், எஸ்.பழனிச்சாமி, எஸ். வெங்கடாசலம், ஏ.அகிலன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் டி.சுரேஷ்பாபு,

டிஎம். சரவணகுமார், ஏபி. வெங்கட் கண்ணன், எஸ்.ரமேஷ், இஎன். மாதேஸ்வரன், எஸ். ஆனந்த், கே. நல்லுசாமி, சிறப்பு அழைப்பாளர்களாக கரூர் வழக்கறிஞர்கள் என். செந்தில்குமார், இரா.குடியரசு, டி. ராஜேஸ்வரி, டி.நீல மேகம், கே. பாலசுப்பிரமணியன் என்.பி. ரமேஷ் நக்கீரன் கே. சுப்பிரமணி யன் ஜி.ராஜேஸ்வரி கலந்து கொண்டனர். ஐ.கணபதி நன்றியுரை கூறினார். விழா ஏற்பாடுகளை கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணியினர் செய்திருந்தனர்.





சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி. ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ”கல்விக்கு உதவுதல் கழகப்பணி!கலைஞர் போல் யார் பிறப்பார் இனிஎன்ற தலைப்பில் 250 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி உதவி தொகையை திரைப்படக் கலைஞர் நடிகர் விஜயகுமார் மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் வழங்கினர். உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.எஸ்.இரவிச்சந்திரன், கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, எழும்பூர் பகுதி செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், தொகுதி பொறுப்பாளர் யாழினி, வட்ட கழக செயலாளர்கள் சு.மனோகர், நா.பாலு, வி.அபாய், ஆர். பாபு, சி.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 30.06.2025 | ஆர்.எஸ்.புரம் பகுதி | சுந்தரம் வீதி | சிங்கை பிரபாகரன்<br>ஜெ.ஸ்ரீபநாதன் |
| 2 | | காந்தி பார்க் பகுதி | லாலி ரோடு | சிங்கை பிரபாகரன்<br>ஜெ.ஸ்ரீபநாதன் |
| 3 | | செல்வபுரம் பகுதி | நார்த் ஹவுசிங் யூனிட் | சிங்கை பிரபாகரன்<br>ஜெ.ஸ்ரீபநாதன் |
| 4 | | தெலுங்குபாளையம் பகுதி | ரவுண்டானா, தெலுங்குபாளையம். | சிங்கை பிரபாகரன்<br>ஜெ.ஸ்ரீபநாதன் |
| 5 | 4.7.2025 | மேட்டுப்பாளையம் வடக்கு நகரம் | சங்கர் நகர் | ஒப்பிலாமணி<br>சீ.தருண்குமார் |
| 6 | | மேட்டுப்பாளையம் தெற்கு நகரம் | காந்திபுரம் | ஒப்பிலாமணி<br>சீ.தருண்குமார் |
| 7 | | சிறுமுகை பேரூர் | தியேட்டர் மேடு | ஒப்பிலாமணி<br>சீ.தருண்குமார் |
| 8 | | காரமடை கிழக்கு ஒன்றியம் | இரும்பொறை தேர்த்திடல் | ஒப்பிலாமணி<br>சீ.தருண்குமார் |
| 9 | 5.7.2025 | தொண்டாமுத்தூர் வடக்கு ஒன்றியம் | தென்னமநல்லூர் | நாகநந்தினி<br>ச.பூங்கொடி |
| 10 | | தொண்டாமுத்தூர் பேரூர் | சந்தைப்பேட்டை | நாகநந்தினி<br>ச.பூங்கொடி |
| 11 | | தாளியூர் பேரூர் | கலிக்கநாயக்கன்பாளையம் | நாகநந்தினி<br>ச.பூங்கொடி |
| 12 | | வேடப்பட்டி பேரூர் | குரும்பபாளையம் | நாகநந்தினி<br>ச.பூங்கொடி |
| 13 | 7.7.2025 | பெரியநாயக்கன்பாளையம் மேற்கு ஒன்றியம் | எம்.ஜி.ஆர். நகர், தடாகம் | தென்னை சிவா<br>அதிரடி அல்தாப்<br>ரா.குமுத ஸ்ரீ |
| 14 | | பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் | கணுவாய் ஜங்ஷன் | தென்னை சிவா<br>அதிரடி அல்தாப்<br>ரா.குமுத ஸ்ரீ |
| 15 | | துடியலூர் மேற்குப் பகுதி | கே.என்.ஜி. புதூர் ரோடு, ஜல்லிக்குறை. | தென்னை சிவா<br>அதிரடி அல்தாப்<br>ரா.குமுத ஸ்ரீ |
| 16 | | துடியலூர் கிழக்குப் பகுதி | வெள்ளக்கிணறு, வி.சி.வி. திடல். | தென்னை சிவா<br>அதிரடி அல்தாப்<br>ரா.குமுத ஸ்ரீ |
| 17 | 8.7.2025 | கோவைபுதூர் பகுதி | ஆஞ்சநேயர் பழமுதிர் நிலையம் அருகில் | சஹா விக்னேஷ்<br>சி.கவின்குமார் |
| 18 | | சுகுணாபுரம் பகுதி | பி.கே.புதூர் கலைஞர் திடல் | சஹா விக்னேஷ்<br>சி.கவின்குமார் |
| 19 | | குனியமுத்தூர் பகுதி | வஹாப் பெட்ரோல் பங்க் எதிரில், பாலக்காடு பிரதான சாலை. | சஹா விக்னேஷ்<br>சி.கவின்குமார் |
| 20 | | கரும்புக்கடை பகுதி | ஜே.பி. மஹால் ரோடு | சஹா விக்னேஷ்<br>சி.கவின்குமார் |
| 21 | 10.7.2025 | காரமடை மேற்கு ஒன்றியம் | தேக்கம்பட்டி | சேலம் கோவிந்தன்<br>செ.தக்ஷிதா |
| 22 | | காரமடை வடக்கு ஒன்றியம் | தென் திருப்பதி நால் ரோடு | சேலம் கோவிந்தன்<br>செ.தக்ஷிதா |
| 23 | | காரமடை நகரம் | பில்லு கடை முக்கு | சேலம் கோவிந்தன்<br>செ.தக்ஷிதா |
| 24 | | காரமடை தெற்கு ஒன்றியம் | காளம்பாளையம், கணுவாய்பாளையம் பிரிவு. | சேலம் கோவிந்தன்<br>செ.தக்ஷிதா |

கோயம்புத்தூர்

நாள் : 27.06.2025

கலைஞர் 100 1924 - 2023

